**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.47/2024**

**Name** : Arumugam
**Father/Husband Name** : Parasuraman

**Age** : 77

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 12.30 P.M

குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படுவது சான்றிட்ட நகல் என்றால் சரிதான். 19.09.1977 ல் நாங்கள் எல்லாரும் ஒப்புதல் கொடுத்து தான் கூட்டு குடும்பாக இருந்தபோது என் அண்ணன் தங்கவேல் பெயரில் எழுதினோம். கூட்டு குடும்பத்திற்காக தான் வாங்கியது என்ற வாசகம் இந்த ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். அவருடைய பெயரில் தான் சுத்த கிரயமாக வாங்கப்பட்டது என்றால் கூட்டுக்குடும்பத்தில் வந்த வருமானதை வைத்து தான் வாங்கப்பட்டது என்று சாட்சி சொல்கிறார். அவ்வாறு கூட்டு குடும்ப வருமானத்தில் வாங்கப்பட்டது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த சொத்து பற்றி குறிப்பிடவே இல்லை என்றாலும் பட்டா மட்டுமே குறிப்பிட்டுள்ளோம் என்றாலும் கூட்டு குடும்பத்தில் வந்தது என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல, பட்டா கொடுக்கும்போது அதன் விவரங்களை கொடுத்துள்ளோம். வழக்குரையில் இந்த கிரய பத்திரத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல, ஆவண பட்டியல் கொடுத்துள்ளேன். இந்த பத்திரத்தை பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை ஆனால் 60 செண்ட் லிஸ்ட் கொடுத்துள்ளேன்.

இந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியும் என்றால் அதன் அசல்

பத்திரத்தை என்னிடம் என் அண்ணன் கொடுத்துள்ளார். அதனால் தான் நாங்கள் அசல் பத்திரத்தை குறியீடு செய்யாமல் சான்றிட்ட நகலை குறியீடு செய்துள்ளோம் என்றாலும் அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ. 1** ஆகும்.(வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை இருப்பதாக தெரிவித்தார். பிரதிவாதி தரப்பில் சாட்சி வாதி ஒப்பு கொண்ட நிலையில் ஆட்சேபணை வராது என்று தெரிவிக்கப்பட்டது)

இந்த ஆவணத்தின் படி தங்கவேல் சொத்தை இந்த தாவாவில் சேர்த்தது தவறு என்றால் சரியல்ல. இது அவர் தனிப்பட்ட வருமானத்தில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, கூட்டு குடும்ப சொத்து இல்லை என்று சொல்வது சரியல்ல. இதனால் தான் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தேவை என்றால் தாக்கல் செய்கிறேன். எனவே தங்கவேல் என்பவருடைய தனிப்பட்ட சொத்தை வழக்குரையில் சேர்த்தது தவறு என்றாலும் எனவே இந்த சொத்து குறித்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல, கூட்டு குடும்ப வருமானத்தில் எத்தனை சொத்து வாங்கியிருக்கிறோம் என்றால் ஒரே ஒரு சொத்து தான் வாங்கியுள்ளோம். அவ்வாறு சொல்வது தவறு என்றாலும் அவரின சுய சம்பாத்திய சொத்து என்றாலும் சரியல்ல.

இந்த ஒரு காரணத்தினாலேயே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. ஐட்டம் நம்பர் 23 வீடு –சொத்து, சர்வே எண்.497 என்று குறிப்பிடப்பட்டது தவறு என்றால் சரியல்ல. அதன் உண்மையான சர்வே எண்.489/27 என்றால் சரிதான்.ஆனால் அதற்கான ஆவணங்கள் கொடுத்துள்ளேன். தாவா வீட்டை கட்டியது என் அப்பா என்றால் என் அப்பா கொஞ்சம் 1987 ல் கட்டினார், அதன் பிறகு நாங்கள் வேலைக்கு சென்று எங்கள் வருமானத்தில் பாதி கட்டினோம். என் அப்பா கட்டிய ஓட்டு வீடு அப்படியே உள்ளது, அதற்கு முன்பாக தான் நாங்கள் மெத்தை வீடு கட்டியுள்ளோம். அதன் அளவுகள் தெற்கிலிருந்து வடக்காக 60, கிழக்கு மேற்கு 16 தோராயமாக சொல்கிறேன், சரியான அளவு நினைவில்லை, ஆவணத்தில் உள்ளது.

வடக்கு தெற்கு 24.4 மீட்டர் இருபக்கமும், மேற்கு பகுதியில் வடக்கு பக்கமான அளவு 7 மீட்டர், தெற்கு பக்கம் கிழக்கு மேற்கு 5.8 மீட்டர் மொத்த பரப்பளவு 1680 சதுர மீட்டர் என்றால் அதுவும் ஒரு தோராயமான அளவு தான். இதன் மதிப்பு ஒரு சதுரடிக்கு ரூ.3610 என்று தாவாவில் சொல்லப்பட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல, தோராயமாக தான் குறிப்பிட்டுள்ளோம். அதனுடைய மதீப்படு ஒரு சதுரடிக்கு ரூ.150 என்றால் நாங்கள் அக்கம் பக்கம் கேட்டு மார்கெட் மதிப்பு தான் போட்டுள்ளோம். சார் பதிவாளர் மதிப்பு ஒரு சதுரடிக்கு ரூ.150 என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 12.50 P.M

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.04.28 18:36:24 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.